*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*28 10 2025 TUESDAY  12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *Chhat பண்டிகை, நாட்டின் செழுமையான பாரம்பரியத்தை வெளிப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

- *தொழில்நுட்ப முன்னேற்றம் அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை சாத்தியமாக்கியுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.*

- *நாட்டில் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி கடந்த செப்டம்பர் மாதத்தில், ஒன்று புள்ளி எட்டு பில்லியன் டாலரை எட்டி புதிய சாதனை படைத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

- *வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் இன்று மாலை காக்கிநாடா அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

- *உலக கோப்பை பாரா Climbing போட்டியில் இந்தியாவின் மணிகண்டன் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.*

*>>>>>><<<<<*

*Chhat பண்டிகை, நாட்டின் செழுமையான பாரம்பரியத்தை வெளிப்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இந்த பண்டிகையின் நிறைவு நாளையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இன்றைய தினம் சூரியபகவானுக்கு பக்தர்கள் சிறப்பு பூஜை செய்து வழிபட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*மக்கள் வாழ்வு வளம் பெற வாழ்த்துவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<*

*Chhat பண்டிகையை ஒட்டி, நாடுமுழுவதும் 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக அகில இந்திய வணிகர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.*

*பீகாரில் மட்டும் 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பொருட்கள் விற்பனையாகியுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.*

*இதற்கு அடுத்தபடியாக தில்லியில் 8 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கும், ஜார்க்கண்டில் 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கும் வர்த்தகம் நடைபெற்றுள்ளது.*

*>>>>>><<<<<*

*தொழில்நுட்ப முன்னேற்றம் அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை சாத்தியமாக்கியுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.*

*கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கோவை சுற்றுப்புற பகுதிகளில் பணியாற்றும் ஜார்க்கண்ட் மாநில தொழிலாளர்களின் வசதிக்காக புதிய ரயில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

*முன்னதாக, குடியரசு துணைத் தலைவராக பொறுப்பேற்ற பிறகு, முதல்முறையாக இன்று தமிழகம் வந்த திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*மாநில அரசின் சார்பில் அமைச்சர்கள் திரு. முத்துசாமி, திரு. சாமிநாதன் ஆகியோர் அவரை வரவேற்றனர்.*

*பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும் குடியரசு துணைத்தலைவரை வரவேற்றனர்.*

*>>>>>><<<<<*

*நாட்டில் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி கடந்த செப்டம்பர் மாதத்தில், ஒன்று புள்ளி எட்டு பில்லியன் டாலரை எட்டி புதிய சாதனை படைத்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் வெளியான கட்டுரையை தமது சமூகவலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் மின்னணு சாதனங்கள் மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி, அதிக அளவில் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக, இத்துறையில் ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தில் இந்தியா புரட்சியை ஏற்படுத்தி வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனோவால் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்று வரும் கடல்சார் வார விழாவில் இன்று பாரம்பரிய தின கொண்டாட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர். கடல்சார் போக்குவரத்தின் மூலம் உள்நாட்டு வர்த்தகத்திற்கு புத்துயிரூட்டப்படுவதாக குறிப்பிட்டார்.

உலகின் நீடித்த எதிர்காலத்தை உருவாக்குவதில் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. சர்பானந்தா சோனோவால் கூறினார்.

>>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரின் கிஷ்துவார் பகுதியில் புதிய விமான நிலையம் அமைப்பது குறித்து சிவில் விமான போக்குவரத்துத்துறை அதிகாரிகள் இன்றும் நாளையும் ஆய்வு செய்யவுள்ளனர்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங். உடான் திட்டத்தின் கீழ், இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளில் பிரதமர் அலுவலகம் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் 8வது மாநாட்டை, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த மாநாட்டில் பேசிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, சூரியசக்தி மின்உற்பத்தி தொடர்பாக, இந்த கூட்டமைப்பு ஆறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தம், உறுப்பு நாடுகளின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் தீவிர புயலாக வலுவடைந்துள்ளது.

இது, ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே இன்று மாலை அல்லது இரவு கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 57 செகண்ட்ஸ்)

இதனிடையே, தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

மழை காரணமாக, கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்வதற்காக தூர்வாரும் வாகனங்களும், கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக சென்னை பெருநகர குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

இந்த புயல் காரணமாக ஆந்திர மாநிலம், நெல்லூர், விசாகப்பட்டினம், காக்கிநாடா உள்ளிட்ட 10 மாவட்டங்களில் பலத்த சூறாவளிக் காற்றுடன் கனமழை பெய்து வருகிறது.

*தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*விசாகப்பட்டினம், அனகாபள்ளி, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் பள்ளிகளுக்கு இரண்டு நாள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ரயில் மற்றும் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.*

*சென்னையிலிருந்து விசாகப்பட்டினம், ராஜமுந்திரி மற்றும் விஜயவாடா செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*புயல் பாதிப்புகளை எதிர்கொள்ள ஏதுவாக, தேசிய பேரிடர் மீட்பு படையின் 25 குழுக்கள் ஆந்திரா, ஒடிசா, சத்திஷ்கட், தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.*

*மேலும் 20 குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<*

*அமெரிக்கா-ஜப்பான் இடையே இரண்டு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.*

*இதன்படி, ஜப்பானிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 15 சதவீத வரி விதிக்கப்படும். இதற்கு மாற்றாக, ஜப்பான், 550 பில்லியன் டாலர் அளவிற்கு அமெரிக்காவில் முதலீடு செய்ய இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.*

*அரியவகை கனிமங்களை வெட்டியெடுத்து, அவற்றை சுத்திகரிப்பதில் இருநாடுகளும் இணைந்து செயல்படவும் மற்றொரு ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<*

*அமெரிக்காவில் விமான நிலைய பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, அந்நாட்டில் விமானப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.*

*நிதி ஒதுக்க மசோதாவிற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்காததால், பணியாளர்களின் ஊதியம் வழங்கப்படாததால், ஊழியர்கள் பணிக்கு வருவது குறைந்துள்ளது.*

*இதனால். 118 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டிருப்பதுடன் சுமார் 4 ஆயிரத்திற்கும் அதிகமான விமானங்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன.*

*>>>>>><<<<<*

*சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் கலாச்சாரத் திருவிழாவிற்கு அந்நாட்டிற்கான இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.*

*இந்த விழா இன்று முதல் அடுத்த மாதம் 3ஆம் தேதி வரை இந்திய தூதரக வளாகத்தில் கலையரங்கில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<*

*உலக கோப்பை பாரா Climbing போட்டியில் இந்தியாவின் மணிகண்டன் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.*

*பிரான்ஸில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>>><<<<<*

*Clutch செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் முதலிடத்தில் உள்ளார்.*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல்நாள் முடிவில் அவர் 4 புள்ளிகளை பெற்றுள்ளார்.*

*>>>>>><<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Prajwal Dev – Nithin Kumar Sinha இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-7, 6-3, 15-13 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Ferguson – சீனதைபேயின் Jeffrey Hsu இணையை வென்றது.*

*>>>>>><<<<<*